**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.12/2023**
**Prosecution Witness**:5

| | | | |
|---|---|---|---|
| Name | Thiru.Shanmugam (P.W.5) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd **day of March 2026** by S.Ponraj, Junior Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது ஈரோடு தெற்கு போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.06.2022ம் தேதி நான் சிவகிரி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது காலை 09.30 மணிக்கு நாமக்கல், கதவு எண்.6/124, மாரியம்மன்கோவில் தெருவைச் சேர்ந்த துரைசாமி மகன் மருதாச்சலம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த தட்டச்சு செய்யப்பட்ட புகாரை பெற்று சிவகிரி காவல் நிலைய குற்ற எண்.82/2022 ச/பி. 279, 304(A) இதச ன் படி வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் மற்றைய நகல்களை சம்மந்தபட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளர் (பொறுப்பு) திரு.ஜீவானந்தம் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். நான் வழக்கு பதிவு செய்தது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பு) :-**

**1)** நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் அ.சா.1இடம் இருந்து புகார்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.02 09:31:40 +0530

பெறப்படவில்லை என்றாலும், அதன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்னதுபோல் கொடுமுடி வட்டக் காவல் ஆய்வாளரின் விசாரணைக்காக வழக்கு கோப்பை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.02 09:31:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.